Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -10

விலை ரூபா 7.00

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -05 22-10-2003 புதன்கிழமை ஓசை 246

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.
யாழ் சாலை,
(சி-8628) கிளிநொச்சி.

# பின்லாந்து ஆசியப் பிராந்தியத் தூதுவர் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு



## தற்போதைய நிலை குறித்து விபரம் திரட்டல்

(கிளிநொச்சி)

பின்லாந்திற்கான ஆசியப் பிராந்தியத் தூதுவர் மிக்லோபிகாலா அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கண்காணிப்புக்குழுவில் தன்னுடைய பங்களிப்பை பின்லாந்து செய்வதையிட்டு அவ்வரசாங்கத்திற்கு சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் நன்றி கூறினார்.

இனப்பிரச்சினை மற்றும் அதன் தற்போதைய நிலை தொடர்பான தகவல்களைத் திரட்டுவதே தனது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## -இந்தியா - சிறிலங்கா இடையில்-

# பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும்!

## ரணில் - இந்தியத்தலைவர்கள் சந்திப்பின் பின்கூட்டறிக்கை

(புதுடில்லி)

**இந்தியா-சிறிலங்கா அரசுகளுக்கு இடையில் பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்வது பற்றி இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், இந்தியத் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்புக்களின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுடில்லிக்குச் சென்ற சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களுடன் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியபின் இருநாட்டு அரசுகளின் சார்பில் நேற்று மாலை நான்கு பக்க கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இரு நாட்டு இராணுவங்களிற்கிடையில் தற்போது நடைமுறையிலிருக்கும் கூட்டு நடவடிக்கையை முறைப்படுத்தும் விதமாக இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் ஜே.ஆர் ஒப்பந்தத்தின் பின்னான இரு தரப்பு உறவுகள் குறித்து ரணில்—சோனியா ஆராய்வு

(கொழும்பு)

இந்திய-சிறிலங்கா ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட பின்னர் உள்ள இருதரப்பு உறவுகள் குறித்து இந்திய எதிர்க்கட்சித் தலைவியான சோனியாகாந்தியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி சென்ற பிரதமர் ரணில் தலைமையிலான சிறிலங்கா தூதுக்குழு இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்தும் சோனியா காந்திக்கு விளக்கிக் கூறியுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலை படுகொலை 16ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அனுஷ்டிப்பு

1987ஆம் ஆண்டின் ஒக்டோபர் 21ஆம் திகதி இந்திய அமைதிப் படையால், யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட வைத்திய நிபுணர்கள் மற்றும் பணியாளர்கள் 21 பேரினது 16 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ப.மகேந்திரதாசன் தலைமையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் கலாத்தன் ஒரு சாதனையாளன் நூல் நிலையத் திறப்பில் கேணல் சூசை புகழாரம்

(அலுவலக செய்தியாளர்)

லெப்.கேணல் கலாத்தன் ஒரு



சாதனையாளன். சிறந்த வேவுப்புலி வீரன்: இந்த மண்ணின் விடுதலைக்காக அயராது உழைத்தவன் என இம்மாவீரனின் நினைவாக மருதங்கேணியில் அமைக்கப்பட்ட நூல் நிலையத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகையிலேயே கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மண்ணை எதிரிகளிடமிருந்து விடுவிப்பதற்காக கடுமையாக உழைத்தவன் இந்த மாவீரன். மிகவும் நம்பிக்கையான ஒரு போராளி. இவர் சர்வதேச கடற்பரப்பில் கப்பல்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றியதுடன் இந்த மண்ணை மீட்பதற்காக கடற்புலிகளின் சார்பில் கேணல் பால்ராஜ் அவர்களுடன் இணைந்து வேவுப் பணிகளில் ஈடுபட்டு பெருமளவான தரவுகளைத்திரட்டி இந்த மண்ணை நாங்கள் மீட்பதற்கான ஒரு பிரதான தளகர்த்தாவாகச் செயற்பட்டார்.

கடற்புலிகளின் கடற்போரை முன்னெடுப்பதற்கான எரிபொருளை கடல் வழியாகக் கொண்டு வரும் மிகவும் சிரமமான பணியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)



லெப்.கேணல் கலாத்தன் நினைவு படிப்பகப் பெயர்ப்பலகையை இளங்குமரன் அவர்கள் திறந்து வைக்கிறார்.

## பாடசாலைகளின் அண்மையாகவுள்ள முகாம்களை அகற்ற படையினர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளிலும் அதனைச் சூழவும் உள்ள படைமுகாம்களை அகற்றுவற்கு யாழ். மாவட்ட இராணுவ தலைமையகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளிலும் அதனை அண்மித்தும் நிலைகொண்டுள்ள படையினரின் நடவடிக்கைகள் மாணவர்களின் கல்வியையும் எதிர்காலத்தையும் பாதிப்பதால் அவை உடனடியாக அகற்றப்பட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலைச் சம்பவம் ஓர் அரசியல் படுகொலை

### மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைச்சம்பவம் ஓர் அரசியல் படுகொலையே என தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.

குடாநாட்டில் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊடகவியலாளர்கள் கடமையின் போது படையினரால் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வந்துள்ளன. இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் நல்லூர் கோவில் வீதியிலுள்ள அதன் அலுவலகத்தில் சந்திப்பொன்று நேற்றுக் காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது. பாதுகாப்புத் தரப்பின் சார்பின் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பலாலி தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த கேணல் அல்விஸ் மற்றும் யாழ். மாவட்ட பொலிஸ்மா அதிபர் விதாரனே, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லயனல் ஜெயசேகர ஆகியோர் கலந்து கொண்டனர். ஊடகவியலாளர்கள் சார்பில் வட-இலங்கைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பகுதியில் ஆரம்ப சுகாதார அபிவிருத்தி தொடர்பான ஆராய்வு!

தமிழீழ சுகாதார சேவைகள், அரச சுகாதாரத் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்களால் வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார சேவைகள் சம்பந்தமான ஆய்வுப்பட்டறை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடனும் தமிழீழ சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலுடனும் நேற்றுக் காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முல்லைத்தீவு மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜெயக்குலராஜா தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைகளின் பணிப்பாளரும், கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெவ், உலக சுகாதார நிறுவனம், எம். எஸ். எப்வ். அம்டா, வேல்ட்விசன், ஒக்ஸ்பாம், போருட், திலீபன் மருத்துவ சேவை, நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம், கோலிக்கு றோஸ், வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற வெளிநாட்டு, உள்ளூர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச சுகாதாரத் திணைக்கள தமிழீழ சுகாதார சேவைகளின் வெளிக்கள உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இவ் ஆய்வுப்பட்டறையில் தற்போது வன்னியில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவ சேவைகள் தொடர்பான செயற்பாட்டுத் தரவுகளும் எடுக்கப்பட்டன. அத்துடன் தற்பொழுது மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு மள்க்குடியேறுவதால் அப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களை மீளவிஸ்தரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அடுத்த வருடம் கிராமிய மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகளை விஸ்தரித்து மேம்படுத்த இந்தக் கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

## முல்லை ம.வி. மாணவன் இரண்டாமிடம்

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் (தமிழ்) போட்டியில் முல்லைத்தீவு ம.வி. மாணவன் மருதநாயகம் ஜெறோம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

9 மாகாணங்களிலிருந்தும் மாணவர்கள் இப் போட்டியில் கலந்து கொண்டனர். ஏற்கனவே இம்மாணவன் பல பேச்சுப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

புதுக்குடியிருப்பு பி. செ.பிரிவில்

## சர்வதேச சிறுவர் தினப் போட்டியில் பரிசில் பெற்றோர் விபரம்

புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலரின் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையேயான சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு, கட்டுரைப் போட்டி ஆரம்பப் பிரிவு 1ஆம் இடம் இரணைப்பாலை ம.வி.யைச் சேர்ந்த செல்வி.ஆன் அர்ச்சனா, 2ஆம் இடம் புதுக்குடியிருப்பு ம.வி.யைச் சேர்ந்த சி.சாமினி, 3ஆம் இடம் புதுக்குடியிருப்பு ம.வி.யைச் சேர்ந்த சு.சிந்துஜா.

இடைநிலைப் பிரிவில் 1ஆம் இடம் சி.துட்சாயினி புதுக்குடியிருப்பு ம.வி, 2ஆம் இடம் எட்வின் டிலூசா புதுக்குடியிருப்பு ம.வி. 3ஆம் இடம் க.பானுப்பிரியா கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

உயர் நிலைப் பிரிவில் 1ஆம் இடம் து.சுதர்சன் புதுக்குடியிருப்பு ம.வி.2ஆம் இடம்தேவசியானி புதுக்குடியிருப்பு ம.வி, 3ஆம் இடம் நிர்சியா விசுவமடு ம.வி.

கவிதைப் போட்டியில் ஆரம்பப்பிரிவு 1ஆம் இடம் செ.கஜிபன், விக்கினேஸ்வரா வித்தியாலயம், 2ஆம் இடம் த.தக்ஜாயினி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், 3ஆம் இடம் ச.சந்திரிக்கா விசுவமடு ம.வி.

இடைநிலைப் பிரிவு 1ஆம் இடம் சொ.சோதிலட்சுமி புதுக்குடியிருப்பு ம.வி, 2ஆம் இடம் செ.கயந்தா விசுவமடு ம.வி, 3ஆம் இடம் சி.துவாரகா முருகானந்தா வித்தியாலயம்.

உயர்பிரிவு 1ஆம் இடம் பு.பவுஸ்ரெலா இரணைப்பாலை ம.வி, 2ஆம் இடம் செ.கஜந்தி புதுக்குடியிருப்பு ம.வி, 3ஆம் இடம் செ.தாரணி விசுவமடு ம.வி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலாளரினால் வழங்கப்படும் என கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி ஜி. எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்தார். (20)

-தீபாவளி தினத்தன்று-

## சேமிப்பில் வைப்பிலிடுவோருக்கு பரிசில் வழங்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தீபாவளி தினத்தன்று வங்கிச் சேமிப்பில் 10 ஆயிரம் ரூபாவினை வைப்பில் இடுபவர்களுக்கு குத்து விளக்கொன்று பரிசாக வழங்கப் பெறவுள்ளது.

கிளிநொச்சி மக்கள் வங்கியிலேயே தீபாவளித்தினத்தன்று மட்டும் மேற்படி பரிசு வழங்கப் பெறவுள்ளது.

இதற்கென தீபாவளி தினத்தன்று காலை 9.00 மணிமுதல் பகல் 12.00 மணிவரை கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையில் மேற்படி பண வைப்பு நடவடிக்கைகள் இடம்பெறுமென கிளிமக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (சோ)


## கேள்வி அறிவித்தல்

*கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கான கட்டட நிர்மாணம் – கட்டம் 1*

மேற்படி வேலைகளை நிறைவேற்றுவதற்காக இக் ராட் எம்-07 தகுதிக்கு மேல் உள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. மேலதிக தகவல்களையும் கேள்வி தொடர்பான ஆவணங்களையும் அலுவலக நாட்களில் எமது சபைச் செயலகத்தில் பார்வையிடலாம்.

*விண்ணப்பங்களின் முடிவு திகதி 30-10-2003 ஆகும். விண்ணப்பப்பரிசீலனை 03-11-2003 காலை 10.00 மணிக்கு சபை அலுவலகத்தில் நடைபெறும்.*

*மீளளிக்க முடியாத வைப்புத் தொகை – 150/=*
*மீளளிக்கக்கூடிய வைப்பு – 500 /=*

**அ. கேதீஸ்வரன்,**
தலைவர்,
மாவட்ட கூட்டுறவுச் சபை,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(சி-8671)


## நலிவுற்றோர் நலன்வாழ்வு உண்டியல் அறிமுக நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

நலிவுற்றோர் நலன் வாழ்வுத்திட்ட "உண்டியல்" அறிமுகநிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளி நொச்சி சமுதாய முன்னேற்ற நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம்சமுதாயமுன்னேற்ற நிலையத்தினர் வேண்டியுள்ளனர். (சோ,லோ)

## தமிழீழ மாணவர் அமைப்பின் கணினி நிலையத் திறப்புவிழா

(அலுவலக செய்தியாளர்)

கணினி நிலையத் திறப்பு விழா நாளை மறுதினம் காலை 10.00 மணிக்கு கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவுடன், லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய நிதியுதவியுடன், தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பால் மேற்படி கணினிப் பயிற்சி நெறி இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## கிளி.பாடசாலை மாணவருக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு


தொழில் திணைக்களத்தில் மனிதவள மேம்பாட்டுச் சேவையினரால் நடாத்தப்படும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கிளி கனகாம்பிகைக் குளம் அ.த.க பாடசாலையில் கிளிநொச்சி சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் திருமதி வி. ஆனந்த நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.


இதில் கிளிநொச்சி பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த 400 க.பொ.த சாதாரணதர, உயர்தர மாணவர்கள் அங்கு வந்துள்ளனர். இதில் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த பல உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது போன்ற இன்னொரு கருத்தரங்கு யாழ்.வேம்படி உயர்தரபாடசாலைகளிலும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## மேஜர் ஈழப் பிரியா ஞாபகார்த்த கராத்தே போட்டிகள்

இரண்டாம் நாள் நிகழ்வு







## வவுனியாவில் சிறப்புற நடைபெற்ற சிறுவர் அரங்க விழா

(வவுனியா)

திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் சிறுவர்கள் பங்குபற்றும் சிறுவர் அரங்க விழா வவுனியாவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஜயாத்துரை மண்டபத்தில் நடைபெற்ற இச்சிறுவர் அரங்க விழாவில் வவுனியா தெற்கு கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. இரட்ணம் தலைமை தாங்கினார்.

வரவேற்புரையினை ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சித்திரவேல் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் கி.விசாகலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அன்ரன் சோமராஜாவும் கௌரவ விருந்தினராக வவுனியா கோட்டக் கல்வி அலுவலர் கணேசராஜாவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறுவர் நாடகங்கள் அரங்கேறின. தொடர்ந்து சிறுவர் நாடகங்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களும் பங்கேற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (10)


## பண்டாரநாயக்க விமான நிலையம் தனியாருக்கு விற்பனை

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் தனியார் மயமாக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சர்வதேசவர்த்தகஸ்தாபன உரிமையாளர் நோன் பீல்த் தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்றை கொழும்பு பிளாஸா ஹோட்டலில் நடத்தியது. பண்டாரநாயக்க சர்வதேச விமானத்தளம் தனியார் மயமாக்கப்படுமேயானால் அதை விலைகொடுத்து வாங்கப் போவதாக ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் தலைவர் பில்க் தெரிவித்துள்ளார்.

# ஈராக்கிலுள்ள அந்நியப் படைகளை அகற்ற புனிதப்போர் புரிய சதாம் அழைப்பு !

ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான அந்நியப்படைகளை விரட்டியடிக்க


صدام حسين
رئيس جمهورية العراق
١٣ / شعبان/ ١٤٢٣
الموافق ٩/ تشرين الاول/ ٢٠٠٣

ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களின் ஆதரவாளர்களையுடம் அழிப்பதகுற்கு "புனிதப் போர்" தொடுக்க உத்தரவிடும் சதாமின் கடிதம்

"புனிதப் போர் புரிய" ஈராக்கியர்கள் முன்வர வேண்டுமென சதாம் மீண்டும் அழைப்புவிடுத்துள்ளார்.

சதாமின் கையொப்பம் இடப்பட்ட கடிதத்தின் பிரதிகள் அவரின் சொந்த ஊரான ரிக்றிட் நகரில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இக் கடிதத்திலேயே இவ் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. அந்நியப்படைகளுக்கு உதவிபுரிகின்ற உள் நாட்டவர்களையும் எதிர்த்துப் போராடுமாறு அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது. அக்டோபர் 09 ஆம் திகதி எனக் குறிப்பிட்டு எழுதிய இக் கடிதம் கடந்த 13 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரை சதாமின் ஆதரவாளர்களால் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பலுஜாவில் அமெரிக்க விமானப்படையின் 82வது பிரிவு குண்டுத் தாக்குதலுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகியதில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் இரு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். நேற்றுமுன்தினம் தொடர்ந்த தேடுதல் நடத்தப்பட்டது.

## பதவி விலகல்

அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான யோர்தானின் பிரதமர் அபு கல் றெகெம் ராஜினாமா செய்துள்ளார். மன்னா அப்துல்லா நாளை புதிய அரசை நியமிப்பார் எனத் தெரிய வருகிறது. றெகெம் ஈராக்குடன் உறவுகளைக் கொண்டிருந்தவர் அவரது நிர்வாகம் ஊழல் நிறைந்ததாக அரசியல் விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# ஈராக்கில் பொதுமக்கள் படுகொலைகளை தடுத்து நிறுத்த அமெரிக்கா தவறிவிட்டது!

## மனித உரிமை அமைப்பு கண்டனம்

**ஈராக்கில் அமெரிக்கப் படையினரால் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க அமெரிக்கா தவறிவிட்டதாக மனித உரிமை கண்காணிப்புக்குழு என்ற அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.**

இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்கப் படைகளால் படுகொலை செய்யப்படும் ஈராக்கிய பொதுமக்கள் தொடர்பாக அமெரிக்கா முறையாக விசாரணைகளை மேற்கொள்ளத் தவிறிவிட்டதாகச் சுட்டிக்காட்டி யுள்ளது.

ஈராக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் முடிந்து விட்டதாக அமெரிக்கா கடந்த மே மாதம் முதலாம் திகதி அறிவித்திருந்தது. அன்றைய நாள் முதல் கடந்த மாத இறுதிவரை அமெரிக்கப் படையினரால் இருபது பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். என்று மேற்படி அறிக்கை தெரிவித்துள்ளது.

அதேவேளை இது போன்று மேலும் 94 படுகொலைகள் பற்றி விசாரணை நடத்தவுள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு கூறுகின்றது.

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளதை விரும்பாத ஈராக்கியர்கள் அமெரிக்கப் படைகள் மீது தொடர்ச்சியாக சிறு சிறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் நூறுக்கும் மேலாக அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஈராக்கிய பொதுமக்கள் மீது அவ்வப்போது பழி வாங்கும் தாக்குதல்களை அமெரிக்கப் படைகள் நடத்துவதாக ஏற்கனவே குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



ஈராக்கியர்களின் வெற்றி நகரமாகக் கருதும் பலுஜாவில் இதுவரை 104 அமெரிக்க இராணுவம் கொல்லப்பட்ட வெற்றிச் செய்தியை சதாமின் படத்துடன் அறிவிக்கும் ஈராக்கிய-எழுச்சிக்காரர்கள்.

# அமைதி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட நிர்ப்பந்தம்

வடக்கு மற்றும் தெற்கு சூடான் அமைதி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டால், அதற்கு எதிரான தடைகளை அமெரிக்கா நீக்கும் என்று கூறப்படுகின்றது.

சூடானின் இந்த இரு பகுதிகளுக்குமிடையே மின்சாரம், வளங்கள் என்பனவற்றின் பங்கீடு, பாதுகாப்புப் பிரச்சினை குறித்து பூசல் நிலவி வருகின்றது.

அமெரிக்காவின் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் சூடான் தொடர்ந்து இடம் பெறுகின்றது.

ஏற்கனவே இரு தரப்பினரும் இடைக்கால அடிப்படை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

விரிவான அமைதி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக சூடான் கூறியுள்ளது.

# பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் நேபாள கிளர்ச்சியாளரால் கடத்தல்

நேபாளத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் 05 பேரைக் கடத்திச் சென்றுள்ளார்கள். இதில் இரண்டு பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

பிரிட்டிஷ் இராணுவத்திற்காக நேபாள இளைஞர்களை சேர்ப்பதற்கு பிரிட்டிஷ் இராணவ அதிகாரிகள் அங்கு சென்றுள்ளதாக காத்மண்டுவில் அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

பிரிட்டிஷ் இராணுவத்தின் 3400 வலுவுடைய கூர்கா படைக்கு ஒவ்வொரு ஆண்டும் சுமார் 250 கூர்காக்கள் புதிதாக சேர்க்கப்படுகின்றார்கள்.

அந்நிய நாடு இப்படி தமது நாட்டில் படைக்கு ஆட்சேர்ப்பதை கிளர்ச்சியாளர்கள் விரும்பவில்லை என்பதனால் தான் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் இரண்டு பேர் உட்பட 05 பேர் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# 'சார்ஸ்' நோய் மீண்டும் பரவலாம் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை!

கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சார்ஸ் நோய் மீண்டும் பரலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோய் மீண்டும் பரவாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பின் மேற்குப்பகுதிகளுக்கான பிராந்திய இயக்குநர் கலாநிதி சிக்கர் ஒபி கூறியுள்ளார்.

சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, ஆராயும் மாநாடு அனால் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் சிக்கர் ஒபி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையிலேயே சார்ஸ் மீண்டும் பரவலாம் எனக் கூறப்படுகிறது.

30இற்கும் மேற்பட்ட நாடுகளில் சார்ஸ் நோய் பரவி ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தமை தெரிந்ததே.

# தேசிய பாதுகாப்பிற்கு வாஜ்பாய் அரசால் ஆபத்து

## —சோனியா குற்றச்சாட்டு

(புதுடில்லி)

வாஜ்பாய் அரசினால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுவதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்

நேற்று முன்தினம் கோலாப்பூரில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்

பயங்கரவாத நடவடிக்கைகள் பீதியூட்டும் அளவிற்குப் பெருகிவிட்டது என்று கூறிய சோனியா காந்தி

பாரதீய ஜனதா,பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக வெறுப்பைப் பரப்புகின்றது என்றும் ஊழல் உச்சத்தை அடைந்துவிட்டது பொருட்களின் விலைகள் மிக அதிகமாக உயர்ந்து விட்டது வேலையில்லாத திண்டாட்டம் பெருகிவிட்டது இதனால் மக்கள் ஜனதா ஆட்சியில் விசனப்படுகின்றார்கள் என்றும் அடுக்கடுக்காகக் குற்றம் சாட்டியுள்ளார்.

# இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல், 10 பலஸ்தீனர்கள் உடல் சிதறிப் பலி!

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் நேற்று முன் தினமிரவு இஸ்ரேலின் விமானத் தாக்குதலில் 10 பேர் உயிரிழந் துள்ளார்கள், பலர் காயமடைந்துள்ளார்கள்.

கமாஸ் தீவிரவாத அமைப்புக்களைச்சேர்ந்த இரண்டு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன வட்டாரங்கள் கூறியுள்ளன.

இப்பகுதியின் மத்திய பகுதியில் நௌஸ்ரியா அகதி முகாமிற்கருகே கார் ஒன்றின் மீது இஸ்ரேலின் உலங்கு வானூர்திகள் இரண்டு ஏவுகணைகளைச் செலுத்தியது.

மருத்துவ சிகிச்சைக்காக அருகிலிருக்கும் மருத்துவமனைக்குச் சென்ற காயமுற்றவர்களை கவனிக்க முடியாதபடி இஸ்ரேலின் தாக்குதல் காரணமாக மருத்துவர்கள் தினறியதாக கூறப்படுகின்றது.



காஸா நகரில் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தபோது இஸ்ரேலிய உலங்குவானூர்தியின் பீரங்கித்தாக்குதலில் கொல்லப்பட்ட இயாத்-அல்-ஹிலோ என்பவரின் உடல் வைக்கப் பட்ட இடத்தில் அழுதுபுலம்பும் உறவினர்கள்.

# சபாநாயகர் நியமனம்

லைபீரியாவின் இடைக்கால நிர்வாக மக்களவைக்குப் பிரதான கிளர்ச்சிக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் சபாநாயகராக நியமிக்கப் பட்டுள்ளார்.

எல்.யூ.ஆர்.டி. என்ற எழுத்துக்களால் இனம் காணப்படும் கிளர்ச்சிக்குழுவின் தலைவரான ஜோர்ஜ்டரீம் என்பவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

# புதுடில்லியில் 'டெங்கு'

இந்திய தலைநகரின் புதுடில்லியில் நேற்றுமட்டும் 18 பேர் புதிதாக டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

டில்லியில் இதுவரை டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்றுடன் 1537 ஆக கூடியுள்ளது.

# பெற்றோல் கலனிலிருந்த மண்ணெய்யை விளக்கினுள் விட்டதால் தீ விபத்து!

## மூவர் எரிகாயங்களுக்குள்ளாகினர்

(அலுவலக செய்தியாளர்)

**பெற்றோல் கலனில் இருந்த மண்ணெய்யை எரிந்து கொண்டிருந்த விளக்கிற்கு விட்டபோது எதிர்பாராதவிதமாக அது தீப்பிடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் எரிகாயங் களுக்குள்ளாகினர்.**

இச் சம்பவம் நேற்று முன்தின மிரவு 7மணியளவில் தாழையடி ஆழியவளையில் இடம்பெற்றுள்ளது. இதன்போது ஆழியவளையைச் சேர்ந்த பரமேஸ்வரன் பத்மினி (வயது 32) இவரின் பிள்ளைகளான பரதீபா (வயது-8) பலதீபா (வயது-3) ஆகியவர்களே எரிகாயங்களுக்குள் ளாகிய நிலையில் சிகிச்சைக்காக கிளி.மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

எரிந்து கொண்டிருந்த விளக்கிற்கு பெற்றோல் கலனில் இருந்த மண்ணெய்யை விட முற்பட்ட போது தாயும் அவரின் அருகில் இருந்த இரண்டு குழந்தைகள் மீதும் தீப்பற்றியது.

தன்மீது பற்றிய தீயைப் பொருட படுத்தாது தனது பிள்ளைகளை சம்பவ இடத்தில் இருந்து தூக்கி எறிந்து அவர்கள் மீது பற்றிய தீயை அணைக்க முற்பட்டபோது தாயார் மீது பற்றிய தீ படர்ந்து எரிய ஆரம்பித்தது. அதனால் தாயார் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார். தாயாரின் மேற்படி செயலால் அவரது இரண்டு குழந்தைகளும் சிறிய காயங்களுடன் தப்பித்தன. பின்னர் அயலவர்களின் முயற்சியால் தீ அணைக்கப்பட்டு மூவரும் கிளி. மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டனர். (லோ)

# சவுக்கம் காட்டில் விறகுவெட்ட படையினர் தடைவிதிப்பு

### தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு சவுக்கம் காட்டுப் பகுதியில் விறகு வெட்ட வரக் கூடாது என படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி பிரதேசத்திற்கு விறகு வெட்டுவதற்காக மக்கள் பிரவேசிப்பது அதனை அண்டியுள்ள கடற் படை முகாமின் பாதுகாப்பு நடவடிக் கைகளுக்கு பாதிப்பை உருவாக்கும் என்பதைக் காரணம் காட்டி தடை விதித்துள்ள படையினர் அவ்வாறு மீறி பிரவேசிப்பவர்கள் கொண்டு வரும் உடைமைகள் பறிமுதல் (சைக்கிள்,கத்தி,கோடரி) செய்யப் படுவதுடன் பிரவேசிப்போருக்குக் கடும் தண்டனையும் வழங்கப்படும் என எச்சரித்துள்ளனர். (33)

# 146 கொள்ளைகளில் சம்பந்தப்பட்ட ஐவர் கொண்டகுழு கைது

(கொழும்பு)

சுமார் 146 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படும் ஐவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 1992ஆம் ஆண்டுமுதல் சுமார் 60 கோடிரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்டிருப்பதாக பேலியகொட பொலிசார் தெரிவித்துள்ளனர்.(32)

# நிமலராஜன் கொலையில் தொடர்புடைய ஈ.பி.டி.பி. உறுப்பினர் யாழ். சிறையில்!

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவத் துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் அண்மையில் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. அமைப்பு உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 19ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை, யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்த ஏதுவாக மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு நீதவான் பொலிசாரிற்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், பாலச்சந்திரன் உதயபவன் எனும் மேற்படி ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர், விமானம் மூலம் மகசீன் சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டு, யாழ். சிறைச்சாலை உதவி அத்தியட்சகரிடம் கடந்த ஞாயிறன்று கையளிக்கப்பட்டிருந்தார்.

அவரை இன்றுவரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான உத்தரவை நீதவான் இ.த. விக்கினராஜா பொலிசாருக்குப் பிறப்பித்தார். (27)

# வவுனியா இராணுவ முகாம்கள் படையினரால் புனரமைப்பு

(செட்டிகுளம் நிருபர்)

வவுனியாவில் பல இராணுவ முகாம்களினை இராணுவம் புனரமைத்து பாதுகாப்பு வேலிகள், மண் அரண்கள், பதுங்கு குழிகள் என்பன அமைத்து வருகின்றது.

வவுனியா, பூவரசம்குளம் முன்னரங்க நிலைகளில் மண் வேலிகள் மூலமும் பனை ஓலைகள் மூலமும் மறைத்தும் புனரமைக்கும் இராணுவம்,

பிரமநாதன் குளம் பகுதியில் முன்னரங்க காப்பரணுக்கும் முகாம்களுக்கு இடையில் பதுங்குகுழி போன்று சுரங்கப் பாதைகளினையும் அமைத்து வருகின்றது. அதே போன்று பறையநாதன்குளம் பகுதியிலும் இராணுவம் இவ்வாறு அமைத்து வருகின்றது.

ஏற்கனவே வவுனியாவின் பிரதான முகாமான யோசப் முகாமினை பாரிய அளவு கிரவல் மண் போட்டு வேலிகள் அமைத்துள்ளனர். இதனால் மக்கள் மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு இராணுவத்தினர் தயார் ஆகுகின்றனரா? என்று அஞ்சுகின்றனர். (21)

# நிக்கொட் திட்டத்தின் கீழ் வவுனியாவில் 65 கருத்திட்டங்கள்

(செட்டிகுளம்)

நிக்கொட் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 330 மில்லியன் பெறுமதியான 65 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிக்கொட் திட்டப் பணிப்பாளர் எஸ்.கிருபாசுதன் தெரிவித்தார்.

கல்வித்துறைக்கு 73 மில்லியன் பெறுமதியான 21 கருத்திட்டங்களில், 14 பாடசாலைக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதாகவும், 180 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் 46 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். அத்துடன் பாடசாலைகளின் மலசல கூடம், குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவைகளும் செய்யப்படுவதாகவும்,

சுகாதார 13 கருத்திட்டங்களுக்கென 68 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் செட்டிகுளம் பகுதியில் M.O.H மருத்துவமனை ஒன்றும்

நெடுங்கேணிப் பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட சுற்றியல் கூறு வைத்தியசாலை அமைக்கப்படு வதாகவும், வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கிருபாசுதன் தெரிவித்தார். (21)

## -மனைவியுடனான தகராறில்-

# இராணுவ சிப்பாய் கைக்குண்டுவீச்சு ; மாணவி ஒருவர் பலி ; 32 பேர் காயம்!

(கொழும்பு)

காலி தளாபிட்டியவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவி ஒருவர் பலியானார். மேலும் 32 பேர் காயமடைந்தனர்.

இராணுவ சிப்பாய் ஒருவர் தமது மனைவியுடன் கோபமுற்ற நிலையில் மனைவியின் தாயாரின் வீட்டின் மீது கைக்குண்டினால் தாக்குதலை மேற்கொண்டபோது, வீதியில் சென்ற மாணவி பலியானதுடன் ஏனையோர் காயமடைந்தனர். இதில் அநேகமானோர் மாணவர்களாவர். குறிப்பிட்ட இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சிப்பாயின் மனைவிக்கு இரு கால்களும் துண்டிக்கப்பட்டுள்ளன. (32)


உங்கள் நிறைவே எங்கள் மகிழ்ச்சி

“தமிழீழ வைப்பகம்”

உலக சேமிப்பு தினத்தை முன்னிட்டு.....

மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் நடமாடும் வங்கிச் சேவையினை,

* பூநகரி
* ஒட்டுசுட்டான் பிரதேசங்களில்

18-10-2003, 25-10-2003 நாட்களில் நடாத்துகின்றது

உங்களுக்காகவே உங்கள் ஊரில்
விரும்பிப் பணி செய்யக் காத்திருக்கின்றோம்.
இவ் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி
கணக்கொன்றை ஆரம்பித்து உங்களையும்
“தமிழீழ வைப்பகத்துடன்”
இணைத்துக் கொள்ளுங்கள்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் நிறைவு

(சி-8656)



தமிழீழப் போக்குவரவுக் கழகம்

பருவகாலச்சீட்டு வழங்கல்

பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு மாணவர்களின் நலன்கருதி அதிபர் அவர்களால் மாணவர்களின் பெயர், கற்கும்தரம், இடம் ஆகியவற்றை விதந்துரை செய்யப்பட்ட பாடசாலை முத்திரையுடன் பணத்தையும் பெற்று ஒருவர் மூலம் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சீட்டு வழங்கப்பட மாட்டாது.
- பருவகாலச்சீட்டு பெற்றுக் கொள்ளும் இடங்கள்

பேருந்து நிலையம் முல்லைத்தீவு, தமிழீழப்போக்குவரவுக்கழகம் புதுக்குடியிருப்பு, பேருந்து நிலையம் புளியங்குளம், பேருந்து நிலையம் மல்லாவி, பேருந்து நிலையம் முகமாலை, வழி அனுமதிப்பணியகம் பளை, பூநகரி மகாவித்தியாலயம்.

மேற்காட்டிய இடங்களில் 25ஆம் நாள் தொடக்கம் 30ஆம் நாள் வரை வழங்கப்படும். அரச பணியாளர்கள் இதே இடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
நடுவப்பணிமனை,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
விசுவமடு.

(சி-8667)

# கமகமக்கும் கணினிகள்




கணினித் திரையில் காட்டப்படும் பழச்சாறுகள், வாசனைத் திரவியங்கள், உணவு வகைகள் என்பன அவை காட்டப்படும் போது கூடவே அவற்றின் வாசனையையும் நம்மால் நுகர முடியுமா? இப்பொழுது இணையம் மூலம் பல பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதனூடாக உணவு வகைகள், வாசனைப் பொருட்கள், மலர்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய முடியும். மலர்ச் செண்டுகளை வாழ்த்துக் கூறி அனுப்ப முடியும். அதேவேளை அவற்றைப் பார்த்து வாங்கும் போது



அவற்றின் வாசனையையும் நுகர்ந்து பார்க்க முடியுமா? ஆம் இதற்கெனவே சில வகை இணையத் தளங்கள் உருவாகி வருகின்றன.

### ஐ.ஸ்மெல் (I-smeel)

ஐ.ஸ்மெல் என்பது இவ்வாறான தொரு வாசனையை உருவாக்கும் கருவியாகும். கலிபோனியாவிலுள்ள டி.ஜி செண்ட் நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்ட ஒரு தொழில் நுட்பம் மூலம் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இக் கருவியை நாம் கணினியுடன் இணைத்துவிட்டால் வாசனையை நுகர முடியும். இந்தக் கருவி 128 அடிப்படை மணமிகளால் நிரப்பப்பட்டுள்ள பேழையைக் கொண்டுள்ளது.



மணங்களைப் பரப்பும் இணையத் தளத்திற்குச் செல்லும் போதோ அல்லது வாசனையை டிஜிற்றல் வடிவத்தில் பதிவு செய்த குறுந்தட்டை (CD) இயக்கும் போதோ அக்குறிப்பிட்ட வாசனையை ஏற்படுத்தக் கூடிய வகையில் இப்பேழையிலுள்ள பொருத்தமான மணமிகள் பொருத்தமான விகிதத்தில் கலந்து குறிப்பிட்ட பொருளின் வாசனையைக்கொண்டு வருகிறது.

உதாரணமாக மல்லிகைப்பூ வாசனை என்றால் அதற்குத் தேவை யான அடிப்படை வாசனைகள் கலந்து மல்லிகையின் வாசனையைக் கொண்டுவரும். கற்பூரம் எரியும் போது கற்பூர வாசனைக்குத் தேவையான மணமிகளும் புகைக்குத் தேவை யான மணமிகளும் கலந்து அவ் வாசனையை உருவாக்கும்.

இவ்வாசனைகள் டிஜிற்றல் குறியீடாக மாற்றப்பட்டு அனுப்பப்படும் போது கணினியானது ஐ.ஸ்மெல் என்னும் கருவியை, குறியீட்டுக்கு ஏற்ப இயக்கி மணத்தை உருவாக்குகிறது. ஆரோமா ஜெட் என்ற இன்னொரு இணையத்தளம் வாசனையை இணைய வடிவுக்கு ஏற்ப மாற்றி வாசனையை இணையமூடாக மணம் பரப்புகிறது. இது 16 அடிப்படை மணமிகளைப் பயன்படுத்துகிறது. இதற்கென விசேட கருவியையும் அது தயாரித்துள்ளது. திரைப்படக் காட்சிகளின் போது கட்புலன் செவிப்புலனுடன் மூக்கிற்கும் விருந்தளிக்கும் காட்சிகள் உருவாக்கவும் முயற்சிகள் சாத்தியப்படலாம்.

ஆனால் இவ்வாறான செயற்கை வாசனைத் தொழில் நுட்பத்தில் சில சிக்கல்களும் உள்ளன. இயற்கையாக நாம் வாசனைகளை நுகரும் போது அவை திடீர் மாற்றத்துக்கு உள்ளாவதில்லை. அதாவது நாம் வீதியால் வேகமாக நகர்ந்துகொண்டிருக்கும் போது பல்வேறு வாசனைகளை நுகரக்கூடும். அவ்வாறு நுகரும் போது அவ்வாசனை எம்மைப் படிப்படியாக அணுகிப் படிப்படியாக விலகிச் செல்வதை அவதானிக்கலாம்.

ஆனால் திரைப்படங்களிலெனில் காட்சிகள் திடீர் மாற்றங் களுக்கு உள்ளாகும் போது வாசனைகளும் திடீர் மாற்றங் களுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு வாசனை நொடிக்கு நொடி மாறிக்கொண்டிருக்குமானால் கண்கள்,காதுகள் போல மூக்கும் தனது புலன் உணர்வுகளை மாற்றிக்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு மாற்றுவது எளிதானதல்ல. இதனால் குழப்பமேற்பட்டு மூளையின் பகுதிகள் மழுங்க நேரிடலாமென எச்சரிக்கப்படுகின்றது.

இதேவேளை உலகிலுள்ள எல்லாவித வாசனைகளையும் டிஜிற்றல் வடிவத்துக்கு உட்படுத்துவது கடினமாகும். அறிவியலாளர்கள் ஏறத்தாழ ஆயிரம் அடிப்படை மணமிகள் சேர்ந்தே உலகிலுள்ள அனைத்து வாசனைகளையும் உருவாக்குவதாகக் கூறுகின்றனர். ஆனால் இப்போது 200-260 அடிப்படை மணமிகளே கண்டறிந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இன்னுமொரு பிரச்சினை மணத்துக்கான உள்ளீட்டு, வெளியீட்டுக் கருவிகளை உருவாக்குவதில் எழுகின்றன. இவ்வகைக் கருவிகள் பல தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் அவை எல்லாமே துல்லியமான பெறுபேற்றைத் தருவதில்லை. உதாரணமாக இப்பொழுது பல நிறுவனங்கள் குறுந்தட்டுகளில் பாடல்களை ஒலிப்பதிவு செய்தும் காட்சிகளைப் பதிவு செய்தும் விற்பனை செய்கின்றன. ஆனால் அவற்றின் தரமும் துல்லியமும் ஒரே மாதிரியானதாக இருப்பதில்லை.

அதேபோலவே பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் கருவிகளினூடாக ஒரே வாசனைத் திரவியத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட டிஜிற்றல் குறியீடுகள் ஒரே வாசனையைத் தருவதில்லை. ஒலி, ஒளிக்கு அதனைச் சகித்துக்கொள்ள



முடியினும் வாசனை துல்லியமாக இல்லாத போது இணையத் தளத்தினூடாகச் செய்யும் கொள்வனவின் போது வாடிக்கையாளருக்கும் விற்பனையாளருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட வழியேற்படும்.

உதாரணமாக இணையத்தினூடாக மரக்கறி கொள்வனவு செய்யும் ஒருவர் அதனூடாக அழுகிய மணம் ஏதாவது வருகிறதா? என்று பார்ப்பார். அதனை அவரால் துல்லியமாக உணர முடியாவிட்டால் கொள்வனவு செய்தபின் ஏமாற்றமே அடைவார்.

எவ்வாறாயினும் இயற்கையுடன் செயற்கை போட்டியிட்டு வெற்றி கொள்ள முடியாது. ஆனால் கூடிய திருத்தத்துடனான மணம் பரப்பும் கருவிகள், இயற்கை போன்ற உணர்வை ஏற்படுத்தும் அளவில் தயாரிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. அது வரை மணம் பரப்பும் இணையத் தளங்கள் திரைப்படங்கள் குறுந்தட்டுகளில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் பொறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

**சி.சிவபாலன்**

# படையினரும் இராணுவ நோக்கங்களுமே பேச்சுக்களுக்கு பெரும் தடையாகவுள்ளன

## - இடம்பெயர்ந்தோர் நலன் புரிச்சங்கங்களின் சமாசம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் நிலை கொண்டுள்ள ஆயுதப்படையினரும் அவர்களின் ராணுவநோக்கங்களும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுக் களுக்குப் பெரும் தடையாக இருப்பதை அரச தரப்பு நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை வலிவடக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கங்களின் சமாசத்தினால் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சமாதானத்தையும் அதன் நலனையும் கருத்திற் கொள்ளாது இராணுவ நலன் களைமட்டும் பேணி வரும் இவர் களின் செயற்பாடு எதிர்கால சந்ததி யினதும் கல்வி மேம்பாடு, பொருளாதா ரம் உட்பட்ட வாழ்வியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந் துள்ளது.

எனவே இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக செயற் படுவதுடன் அதிகார பலம் பொருந்திய இடைக்கால நிர்வாக சபை ஒன்றை புலிகளுக்கு வழங்கப்படுதலின் அவசியத்தையும் இவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (33)

# கடற்படை பயிற்சி நடவடிக்கையால் மீன்பிடித் தொழில் பெரும் பாதிப்பு!

((யாழ்ப்பாணம்)

கடற்படையினர் கரையோரங்களிலும் கடற்பரப்பிலும் பயிற்சிகளில் ஈடுபடுவதனால் தமது இயல்பான தொழில் பாதிக்கப்படுவதாகக் கச்சாய்ப் பகுதி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியில் உள்ள கச்சாய்த் தம்பன்தோட்ட படைமுகாமைச் சேர்ந்த கடற்படையினர் இப்பகுதியில் தீவிரமான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களைத் தாம் குறிப்பிடும் ஒரு சில பகுதிகளால் மட்டுமே கடற்பரப்புக்குத் தொழிலுக்காகப் பிரவேசிக்க முடியும் எனவும் தாம் பயிற்சியில் ஈடுபடும் இடத்தை அண்மித்துப் படகுகளைக் கரை ஒதுக்கக் கூடாது எனவும் எச்சரித்துள்ளதால் தமது தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இப்பகுதி மீனவர்களைக் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே படகுகளில் சென்று பாஸ் மற்றும் அனுமதிப் பத்திரங்களுடன் தொழில் செய்யப் படைத்தரப்பு அனுமதித்திருந்தமை தெரிந்ததே. (33)

# அதிபர், இரு ஆசிரியர்களுடன் பாடசாலை இயங்கும் அவலம்!

## -கல்வியமைச்சுக்கு மக்கள் முறையீடு

(மூதூர்)

மூதூர்- இறால்குழி கிராமத்தில் 180 மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலையில் அதிபருடன் இரு ஆசிரியர்கள் மாத்திரம் கடமையாற்றி வருவதாக அப்பகுதி மக்களால் முறையிடப்பட்டுள்ளது.

ஒன்பது ஆசிரியர்கள் இருக்க வேண்டிய ஆளணி திரட்டைக் கொண்டுள்ள இப் பாடசாலையில் ஏழு ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதாகவும் இதை நிரப்ப இதுவரை மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்காதுள்ளதால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்து வருவதாகவும் மக்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (25)



பரந்தன்-முல்லை வீதியில் விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் சீமெந்து ஏற்றிவந்த பாரவூர்தி குடைசாய்ந்ததைப் படத்தில் காண்க. வேகமாகச் சென்றுகொண்டிருந்த பாரவூர்தி உழவு இயந்திரத்துக்கு வழி விட்டுக்கொடுக்க முற்பட்ட போதே இது நிகழ்ந்தது. (19)

# இரண்டாயிரமாம் ஆண்டிற்கு முன் பெறப்பட்ட விவசாய கடன்களுக்கான வட்டி தள்ளுபடி

## கிளி.இலங்கை வங்கி முகாமையாளர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் 2000ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் விவசாயக் கடனைப் பெற்ற விவசாயிகள் இது வரை மீளச் செலுத்தவில்லை யென தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கிளிநொச்சி இலங்கை வங்கிக்கிளை முகாமையாளருடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

2000ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் கூடுதலான விவசாயிகள கிளி. இலங்கை வங்கிக்கிளையில் கடன் பெற்றுள்ளனரெனவும். நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக மேற்படி பெறப் பட்ட கடன்கள் மீள வங்கிக்கு விவசாயிகளினால் செலுத்தப்பட வில்லையெனவும் தெரிவித்ததுடன் மேற்படி கடனை விவசாயிகள் மீளச்செலுத்தும் வகையில் பெறப்பட்ட கடனுக்கு வட்டியினை மட்டும் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பெற்றுள்ள தெனத் தெரிவிததுள்ளார். (சோ)

# மட்டக்களப்பில் புதைக்கப்பட்ட கண்ணிகளை மீட்க முடிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் அகற்றப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளைத் தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்துடன் இணைந்து மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மேற்கொண்டுள்ளார்கள்.

இதன் முதல் நடவடிக்கையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 45 பேருக்கு ஒருமாத வதிவிட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு 2004-ல் ரூ.1200 மில்.செலவிட முடிவு

வடக்குக் கிழக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு அடுத்த வருடம் 1200 மில்லியன் ரூபாவை செலவிட உலக வங்கி தீர்மானித்துள்ளது.

இவ்வருடம் இப்பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கென 1560 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 89 வீதம் ஏற்கனவே பல திட்டங்களுக்குச் செலவிடப்பட்டுவிட்டதாகவும் உலக வங்கியின் பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார்.

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு அண்மையில் வவுனியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில், அரச அதிபர் கே.கணேஷை சந்தித்துப் பேச்சு நடத்தியது. இந்தப் பேச்சில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# பணிநிலை வேண்டுகை

வன்னியில் நன்மதிப்புடன் இயங்கிவரும் முன்னணி நிறுவனமான பாண்டியன் வாணிபத்துக்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு ஆளணி தேவைப்படுகிறது. தகைமையும் பட்டறிவுமுடையவர் வேண்டுகைகளை அனுப்பி பணியை பெற்றிட முனையவும்.

| பணிநிலை | கல்வித்தகைமை | பட்டறிவு | பால் | அகவை |
|---|---|---|---|---|
| மேற்பார்வையாளர் | க.பொ.த. (உ/த) சித்தி. | முன்னணிநிறுவனம் அல்லது பொதுத்துறை நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு. | ஆண் | 23-40 |
| கணனி இயக்குநர் (கணக்குப்பதிவாளர்) | க.பொ.த(சா/த) இல் ஆங்கிலம்,தமிழில் திறமைச்சித்தி உட்பட தேர்ச்சிபெற்றிருத்தல். அல்லது கணனிக்கல்வியில் டிப்ளோமா பட்டம் அல்லது MS office இல் தேர்ச்சி | கணனித்துறையில் 2வருடம் பணியாற்றிய முன் பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| எழுதுநர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் விரும்பத்தக்கது. | பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனத்தில் எழுதுநர் பணியில் ஓராண்டுக்கு குறையாத பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| களஞ்சியக்காப்பாளர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் விரும்பத்தக்கது. | முன்னணி நிறுவனம் ஒன்றில் களஞ்சியக்காப்பாளர் பணியில் 2 வருடத்திற்கு குறையாதபட்டறிவு. | ஆண்கள் | 20-40 |
| தொழில்நுட்பவியலாளர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. மின்னியல், இலத்திரனியல் கற்கைநெறி ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கற்று தேர்ச்சிச்சான்றிதழ் பெற்றிருத்தல். | மின்னியல், இலத்திரனியல் துறைசார் தொழிலில் 2 வருடத்திற்கு குறையாத பட்டறிவு. | ஆண்கள் | 25-40 |
| விற்பனையாளர் | க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். | முன்னணி நிறுவனம் ஒன்றில் அல்லது நடமாடும் வாணிபத் தொழிலில் 2 ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| பாதுகாவலர் | க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். | பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனத்தில குறிப்பிட்ட பணியில் 3ஆண்டுகள் பட்டறிவு பெற்றிருத்தல். | ஆண்கள் | 18-40 |
| உணவு வழங்குநர் (உபசரிப்பாளர்) | 9ம் வகுப்பு கற்றிருத்தல் | முன் பட்டறிவு விரும்பத்தக்கது. | இருபாலரும் | 18-40 |
| சிற்றூழியர் | — | குறித்தபணியில் குறிப்பிடத்தக்க அனுபவம் விரும்பத்தக்கது. | இருபாலரும் | 18-40 |
| சமையல் உதவியாளர் | — | குறித்தபணியில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் | இருபாலரும் | 18-40 |
| சுத்திகரிப்புத் தொழிலாளர் | — | குறித்தபணியில் முன் அனுபவம் | இருபாலரும் | 18-40 |

⇨ சம்பளம் தகைமைக்கேற்ப நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்.

⇨ பட்டறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பட்டறிவு இல்லாதவர்களும் வேண்டுகைகளை செலுத்தவும்.

⇨ வேண்டுகை அனுப்பவேண்டிய கடைசி நாள் 05.11.2003.

⇨ வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி :- விளம்பர இல-600,
ஈழநாதம் பணிமனை,
யாழ்சாலை, கிளிநொச்சி.

⇨ வேண்டுகை அனுப்பியவர்கள் அனைவரும் நேர்முகத்தேர்வுக்கான நாள், நேரத்தைஅறிவதற்கு 07-11-2003ஆம் நாள் வெள்ளிநாதத்தை தவறாது பார்க்கவும்.

ஆளுநகை
**பாண்டியன் வாணிபம்**

[ ஈ-8538 ]

# சமாதானத்தைவிட படைத்தரப்பை வலுப்படுத்துவதிலேயே அரசு ஆர்வம்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் பொருளாதாரத்தை மேம்படுத்தல், ஆயுதப் படைத்தரப்பை வலுப்படுத்தல், சமாதானத்தை நிலைநிறுத்துதல் போன்றவற்றை முனைப்புப்படுத்துதல் என்ற ரீதியில் தனது செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், இம்மூன்று விடயங்களிலும் அரசாங்கம் காட்டும் ஆர்வம், அக்கறை என்பன ஒரே அளவிலானதாக உள்ளதா? எதற்கு முதன்மை அளிக்கமுற்படுகின்றது என்பன கேள்விக்குரியனவாகவே உள்ளன.

சிறிலங்கா பிரதமர்களில் ரணில் விக்கிரமசிங்க அதிகளவில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டவர் என்ற பெருமைக் குரியவர். அவர் ஒருமாத காலத்திற்குள்ளேயே ஒன்றிற்கு மேற்பட்ட சுற்றுப் பயணங்களை நடத்துபவராகவுள்ளார். இச் சுற்றுப் பயணங்கள் யாவும் உத்தியோகபூர்வமாகவே உள்ளன. இப்பயணங்களின் முக்கிய இலக்காக சிறிலங்காவிற்கான பொருளாதார உதவி, வர்த்தக உறவை மேம்படுத்துதல், இராணுவ உதவி பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இதேவேளை, இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு என்ற ரீதியில் அமெரிக்காவின் ஆசீர்வாதத்தை ரணில் அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது என்றே கூற முடியும். இவ்விடயத்தில் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பங்கு அதிகம் என்றே அரசியல் வட்டாரத்தால் தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்காவைப் பொறுத்து இன்று அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளும் சலுகையைப் பெற்றுக்கொண்ட நாடாகவுள்ளது. அதுமட்டுமல்ல, அமெரிக்கப் போர்க்கப்பல் அடிக்கடி இலங்கைக்கு வருகை தரும் அளவிற்கு இன்று இராணுவ ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பிராந்திய வல்லரசான இந்தியாவுடனும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மிக நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பை வளர்த்துக்கொள்வதில் அக்கறை காட்டுவதாகவே உள்ளது. இவ் ஒத்துழைப்பானது இராணுவ ரீதியில் மட்டுமல்ல, சிறிலங்காவிற்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்பது போன்ற தகவல்கள் ஊகத்தில் வெளிவருவதற்கும் பிரஸ்தாபிக் கப்படுவதற்குமான சூழல் உருவாகியுள்ளது.



இந்த வகையில், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், இராணுவத்தை வலுப்படுத்துதல் என்பது போன்ற விடயங்களில் தீவிர அக்கறையுடன் செயலாற்றியுள்ளது என்றே கூறலாம். ஆனால், இராணுவ பலத்தை வலுப்படுத்துதல், பொருளாதாரத்தை மேம்படுத்துதல் என்பன வெளிநாடுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாகவே இன்று உள்ளன. ஆகை உள்ளன. எனினும், சமாதானத்திற்கு எதிரானவை என்ற ரீதியில் அவற்றிடையே ஒருமைப்பாடு ஒன்று காணப்படுவதாகவே உள்ளது. ஆனால், அரசாங்கத் தரப்பு இச்சக்திகளை உரிய முறையில் எதிர்கொள்வதில்



அரசியல் இராஜதந்திர ரீதியிலும் முக்கியத்துவம் மிக்கவையாகும்.

இதன் காரணமாக இந்தியாவுடனான வர்த்தக உறவு மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, இந்திய சிறிலங்காவிற்கு அளிக்கும் பொருளாதார இராணுவ உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதெனலாம். கடந்த வாரத்தில் கூட கொழும்பிற்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கா சிறிலங்காவிற்கு இந்திய நாணயப்படி 300 கோடி ரூபாவை உதவியாக வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றி ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்பனவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்ப்பிற்கும் மேலாகப் பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளார் எனின் மிகையாகாது. டோக்கியோ மாநாடு சிறிலங்காவிற்கு வழங்க முன்வந்த கூடுதலான நிதி உதவி அவருக்குக் கிடைத்த வெற்றியே. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டமையால் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்பது வேறுவிடயம். இது தீர்வு காணக் கூடியதும் ஒன்றே.

பொருளாதார உதவி என்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானையும், ஐரோப்பிய யூனியனையும் முதன்மைப்படுத்திச் செயற்படுபவராகவுள்ளார். டோக்கியோ மாநாட்டில் எதிர்பார்ப்பிற்கும் அதிகமான நிதி உதவி அளித்ததில் இந் நாடுகளின் பங்களிப்பும் உண்டு.

இதேவேளை, வர்த்தக ரீதியான உறவில் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணுவதில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாய் உள்ளது. இதன் ஓர் அங்கமாக வரிகளற்ற வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டப்படுகின்றது.

இதேசமயம், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வீதிப் போக்குவரத்தை ஏற்படுத்தும் நோக்கில், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் பாலம் ஒன்றை அமைப்பது குறித்தும் தீவிர ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது. இப்பாதை திறப்பு விடயமானது பொருளாதார ஒத்துழைப்பிற்கான நடவடிக்கை எனக் கூறிக்கொண்டாலும் இது வேறு நோக்கிலான நடவடிக்கைகளுக்கும் உதவும் என்ற அடிப்படையில் முக்கியம் பெறுகின்றது.

அத்தோடு, ஜப்பான் அரசும் சிறிலங்காவின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முனைப்புக் காட்டுவதாகவே உள்ளது. டோக்கியோ மாநாட்டில் அதிக நிதி வழங்குவதாக ஜப்பான் அளித்த உத்தரவாதத்தைத் தொடர்ந்தே எதிர்பார்ப்பிற்கும் மேலாக நிதி உதவி கிடைப்

இராணுவ ரீதியில் இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, இரு தரப்பிற்கும் இடையில் இராணுவ ரீதியிலான தகவல் பரி



மாற்றத்தில் மிக நெருக்கமான ஒத்துழைப்பு காணப்படுவது ஏற்கனவே நடைமுறையிலுள்ளதொன்று. தற்போதைய சூழ்நிலையில், இந்தியாவிற்கும் பிராந்தியப் பாதுகாப்பு யோசனைக்குள் சிறிலங்கா இந்தியாவினால் உள்வாங்கப்பட்டுவிடலாம் என்றே எதிர்பார்க்கலாம். இந்த வகையில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கம் மிகவும் உயர் நிலையில் உள்ளது என்றே கொள்ளலாம்.

இதன் காரணமாகவே திருமலையில் இந்திய கடற்படையை நிலை கொள்ள வைத்தல், பலாலி விமானப் படைத்தளத்தின் ஓடுபாதையை இந்தியா புனரமைப்புச் செய்தல் போன்ற விடயங்களில் இந்தியாவிற்கும் -

யினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி வெளிநாட்டுப் பயணங் களை மேற்கொள்ள தற்கும் இவற்றிற்கும் நேரடித் தொடர்புகள் இருப்பது எதிர்பார்க்கத் தக்கதே.

ஆனால், பொருளாதாரத்தை மேம்படுத்தல், ஆயுதப் படையை வலுப்படுத்தல் என்பனவற்றிற்கு ரணில் அரசாங்கம் அளித்துள்ள முக்கியத்துவம் போன்று சமாதான முயற்சிகளை மேம்படுத்தல் அன்றி சமாதானத்திற்கு எதிரான சவால்களை முறியடித்தல் என்ற ரீதியில் நடவடிக்கைகளை மேம்படுத்தியுள்ளதா என்றால் இல்லை என்றே கூறுதல் வேண்டும்.

அதாவது, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவி, இராணுவத்தை வலுப்படுத்துவதற்கான உதவி என்பன வெளிநாடுகளில், இராஜதந்திரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஆகும். ஆனால், சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கான பணிகளின் பெரும் பகுதி உள்நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும்.

மேலும், பொருளாதார உதவிகள், இராணுவ உதவிகள் என்பனவற்றைப் பெறுதல் என்பதற்கு ஒத்துழைப்பு உதவுவோரின் நிபந்தனைகளுக்கு உட்படுதல் என்பன மட்டும் போதுமானது. ஆனால், உள்நாட்டில் சமாதானத்தை மேம்படுத்துவதற்கான பணி அத்தனை இலகுவானதல்ல. தடைகள், முட்டுக்கட்டைகள் பெருமளவில் நிறைந்தவையாகும். ஏனெனில், சமாதானத்திற்கு எதிரான சக்திகள் உள்நாட்டில் மிகவும் பலம் பொருந்தியவையாகும்.

சமாதானத்திற்கு எதிரான சக்திகள் என்ற ரீதியில்அரசியல், மதவாத, இராணுவ சக்திகள் என பலமான முத்தரப்புச் சக்திகள் உண்டு. இதில் அரசியல் சக்திகள் பிளவுண்டு போய்

அக்கறை காட்டவில்லை. அதாவது, சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளை வலுப்படுத்தும் வகையிலோ, எதிரான சக்திகளைப் பலவீனப்படுத்தும் வகையிலோ அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுவதாக இல்லை.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் என்றுமே சமாதானத்திற்கு எதிரான சக்தியாக விடுதலைப்புலிகளையே வெளிக்காட்டி வந்துள்ளனர். ஆனால், இலங்கையின் வரலாற்றில் தமிழர் தரப்பு சமாதானத்திற்கு எதிரான சக்தியாக என்றுமே இருந்ததில்லை. சமாதானத்திற்கு எதிரான சக்திகளாக சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளாக இருந்தவையே என்றும் இருந்துள்ளன.

இவை வரலாற்று ரீதியான செயற்பாடாக இருப்பினும், தற்பொழுதுகூட விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு ஒன்றை முன்வைக்கத் தயாராகிவரும் இவ்வேளையில், பிரதான எதிர்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதோடு, சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியும் உள்ளது. இவை சமாதான முயற்சிகளையே கேள்விக்குள்ளாக்கும் நிலையில் உள்ளன.

இத்தகையதொரு நிலையிலும், பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு இராணுவத்தையும், பொருளாதாரத்தையும் பலப்படுத்தும் முயற்சியில் அக்கறை காட்டும் அரசாங்கம் சமாதானத்தை வலுவடையச் செய்வதற்கான முயற்சிகளில் தீவிரத்தை வெளிப்படுத்துவதாக இல்லை.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதானத்தின் அவசியம் குறித்தும், யுத்த நிறுத்தத்தின் தேவை குறித்தும் இடைக்கிடை உள்நாட்டில் வலியுறுத்த முற்படினும்கூட, தனது ஆயுதப் படைத் தரப்பை மேம்படுத்தவும், நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளை சர்வதேச பிராந்திய பாதுகாப்பு வலைப்பின்னலுடன் இணைத்துக் கொள்வதில் காட்டும் அக்கறை, முனைப்பு அளவிற்கு சமாதான முயற்சிகளை நிலை நிறுத்துவதற்கு உள்நாட்டில் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் இல்லை.

அரசாங்கத்தின் இப்போக்கானது அதனிடம் சமாதான முயற்சிகளுக்கு அப்பால், இராணுவ ரீதியிலான சிந்தனை மேலோங்கி இருப்பதனையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. ஆயினும், சிறிலங்காவின் பொருளாதார மேம்பாடு என்பது, சமாதான முயற்சிகளுடன் பின்னிப் பிணைந்திருப்பது தவிர்க்க முடியாத தொன்றாகியுள்ளதினால்தான் அரசாங்கம் சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலுக்குள் தன்னை இணைத்துக் கொள்ள முற்பட்டுள்ளபோதும், சமாதானம் குறித்துப் பேச முற்பட்டு நிற்பதாக எண்ண வைக்கிறது.

— ஜெயராஜ்

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு காணி பெற்றுக்கொடுக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் சொந்தமானதொரு காணியைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கையில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

1995ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து பிரிக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப நிறுவனம் சொந்தமான காணியிலோ அல்லது கட்டடத்திலோ ஏற்ற வசதிகளுடன் இயங்காததால் இதற்கு வருடாந்தம் தெரிவாகும் 1000 வரையிலான மாணவர்கள் தம் முழுமையான கல்வியைப் பெற முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டி,

இந்நிறுவனத்தை நிர்வகித்து வரும் 3ஆம் நிலைக் கல்வி அமைச்சு உட்பட சகல சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மாணவர்களும் இந்நிறுவன நிர்வாகமும் மகஜர்களை அனுப்பியும் எந்தவித நடவடிக்கையும் இது தொடர்பாக மேற்கொள்ளப்படவில்லை. இதனைத் தொடர்ந்து இந்நிறுவனத்திற்கு காணி ஒன்றை இருபாலைப் பகுதியில் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது ஒரு சில மாதங்களுக்குள் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# மூதூர் இறால்குழி கிராமத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(மூதூர்)

மூதூர்ப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இறால்குழி கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான திட்ட வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் மங்கல விளக்கேற்றி தொடக்கி வைத்தார்.

இலங்கை மின்சார சபையின் பிரதி பொதுமுகாமையாளர் ரணசிங்க மின் விநியோகத் திட்டப் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட தலைவர் கப்டன் துல்கா மற்றும் றொபின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இரு மாதங்களில் திட்ட வேலைகள் முடிவுறுத்தப்பட்டு மின்சார விநியோகம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# போராட்டத்தில் இணைய முன்வந்த 3சிறுவர்கள் ஒப்படைப்பு

விடுதலைப்புலிகள் அமைப்பில் சுயவிருப்பின்பேரில் இணையவந்த மூன்று பாடசாலை மாணவர்கள்,மீள அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். வல்வெட்டித்துறை மற்றும் நெடியகாடு பகுதியைச் சேர்ந்த இம் மூன்று மாணவர்களும் நேற்றுமுன்தினம் வதிரியிலுள்ள விடுதலைப்புலிகளின் வடமராட்சிக்கோட்ட அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மூவரும் 18வயதிற்கும் குறைவானவர்கள். சிறார்களை தமது அமைப்பில் இணைப்பதில்லையென்ற முடிவின் பிரகாரம் பெற்றோரிடம் மீளகையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (27)

# கிளிநொச்சி மாவட்ட பெரும்போகப் பயிர்ச்செய்கை 2003/2004 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

1951ஆம் ஆண்டின்முதலாம் இலக்கச் சட்டத்தாலும், 1968ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கச் சட்டத் தாலும் திருத்தப்பட்ட 1940ஆம் ஆண்டின் 32ஆம் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத் தின் பிரகாரம் 2003/2004 ஆம் ஆண்டிற்கான பெரும்போகப் பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசனங்களைத் தனித்தனியாகக் கூட்டங்களைக் கூடி முடிவு செய்ய முடியாத சூழ்நிலை இன்று நிலவுவதால், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகிய திருநாவுக்கரசு இராசநாயகம் ஆகிய நான் எனக் களிக்கப்பட்ட விசேட அதிகா ரத்தின் மூலம் 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி அன்று பின்வரும் குளங்களிற்கான பயிர்ச்செய்கை அட்டவணையை இத்தால் பிரகடனப்படுத் துகின்றேன்.

| | |
|---|---|
| 01. விஸ்தீரணம் | :- இத்திட்டத்தின்கீழ் அடங்கும் நீர்ப்பாசனப் பதிவேட்டிலுள்ள முழு விஸ்தீரணம். |
| 02. விதைக்கும் நெல்லினம் | :- 3 - 3½ மாதம்<br>4 - 4½ மாதம் |
| 03. இறுதி விதைக்கும் திகதி | :- 3-3½ மாதம் 30.11.2003 வரை<br>4-4½ மாதம் 15.11.2003 வரை |
| 04. ஆரம்ப நீர் விநியோகம் | :- 15.11.2003 |
| 05. கடைசி நீர் விநியோகம் | :- 15.03.2003 |
| 06. வாய்க்கால் துப்புரவு செய்தல் | :- 10.11.2003 வரை |
| 07. கால்நடை கட்டுப்படுத்தல் | :- 15.11.2003-30.03.2003 வரை |

**வாய்க்கால் துப்புரவு செய்யத் தவறின் பாகத்துக்கு ரூபா50 தண்டப்பணமாக அறவிடப்படும்**

கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தரால் நியமிக்கப்படும் கால்நடை பிடிப்பவர்களால் பிடிக்கப்படும் கால்நடைக்கு வழமைபோல் நட்டம் அறவிடப்படும். நட்டம் கட்டத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் அக்கால்நடைகள் விற்கப்படும்.

**நீர்ப்பாசனத் திட்டங்களின் பெயர்கள்**

01. இரணைமடுக்குளம்
02. அக்கராயன்குளம்
03. புதுமுறிப்புக்குளம்
04. கல்மடுக்குளம்
05. வன்னேரிக்குளம்
06. கரியாலை நாகபடுவான்குளம்

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8670)

# வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோருதல்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இயங்கிவரும் நிகொட் கருத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் சாரதி பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து 05.11.2003 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதியானவர்கள் **"அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி"** எனும் முகவரிக்கு முடிவுத்திகதிக்கு முன்னதாகக் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறாது **"நிகொட் அலுவலகத்தில் சாரதி பதவிக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தகைமைகள்**

1. ஆகக்குறைந்தது 8ஆம் வகுப்பு/ஆண்டு 9 பரீட்சையில் அரசாங்கப் பாடசாலையொன்றில் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வாகனம் ஓட்டுவதற்குத் தகுதி வாய்ந்தவர் என வழங்கிய சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
3. மோட்டார் வாகனங்கள் ஓடி குறைந்தது 3 வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
4. 5அடி2½ அங்குலத்திற்குக் குறையாத உயரத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
5. சிறந்த கண்பார்வை, தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
6. போக்குவரத்து விதிகளை நன்கு தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** மேற்படி பதவியில் அரச சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தோடு உத்தியோகத்தரின் தகைமை, அனுபவங்களைக் கருத்திற்கொண்டு சம்பளத்தின் 50%க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.

**குறிப்பு:** கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்குத் தேர்வின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8669)



## சிந்தனைக்கு

இன ஒடுக்குமுறையாலும் இராணுவ அடக்குமுறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

தமிழீழத் தேசியத்தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-10-2003

## தமிழர் மகிழ்ச்சியைக் குலைக்க...

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான மாபெரும் பேரணியை நடாத்துவதற்கும் இந்துக்களின் புனித தினமும், பண்டிகை நாளுமாகிய தீபாவளி நாளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்ந்தெடுத்துள்ளது. இத் தேர்வானது தமிழ் மக்கள் குறித்து அக்கட்சி மேற்கொள்ளக்கூடிய தீர்மானங்களுக்கு ஒரு குறிகாட்டியாகக் கொள்ளத்தக்கதாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இந் நடவடிக்கையானது ஆலோசனையின்றி மேற்கொள்ளப்பட்டதொரு செயற்பாடல்ல அவர்களின் நோக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வை வெளிப்படுத்துவதற்கான பொருத்தமான நாள் என்ற ரீதியிலோ இந்நாள் தேர்வு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

மாறாக லீவுநாள் என்ற ரீதியில் இது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இதற்கு அடுத்தடுத்த நாட்களிலும் லீவு நாட்கள் உள்ளன. ஆகையினால் இது தமிழ் மக்களைச் சிறுமைப்படுத்தும் நோக்கில் தமிழ் மக்களுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமே ஆகும். ஒருவகையில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கை என்று கூடக்கூறலாம்.

அவ்வாறு இல்லாதுவிடில் கால காலமாகக் கடைப்பிடிக்கப்படும் ஒரு பண்டிகை நாளில் இத்தகையதொரு போராட்டத்தைச் சுதந்திரக்கட்சி மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. வேறு ஒரு லீவு நாளிலோ அன்றி தமக்கு வசதியானதொரு நாளிலோ இப் போராட்டத்தை அதனால் முடித்திருக்க முடியும். இதேவேளை தீபாவளி நாளை இதற்கெனத் தெரிவு செய்தமைக்குக் காரணமும் இல்லாமல் இருக்க முடியாது.

அதாவது சிறுபான்மையினருக்கு எதிரான பேரினவாத சக்திகளின் உணர்வுகளை இத்தகைய நாட்களில் கிளறுவதென்பது இலகுவானதொரு காரியமே. ஏனெனில் சிறுபான்மை இனத்தவர் கொண்டாடும் பண்டிகைகள் மகிழ்ச்சியான செயற்பாடுகள் பேரினவாத சக்திகளுக்கு எப்பொழுதும் உவப்பானதாகஇருப்பதில்லை.. இந்நிலையில் தீபாவளி நாளில், பேரணிஒன்றை நடத்துவதன் மூலம் சிங்களப் பேரினவாதத்திற்குப் புத்துணர்ச்சியையும் தமிழர்களின் மகிழ்வைக் குலைத்து விடுதல் என்ற ரீதியில் ஒருவகை மனநிறைவையும் கொடுக்கக்கூடியதே.

அவ்வாறு இல்லாதுவிட்டால், இந்துக்களின் புனித நாளை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. இக்கட்சியோ, அக்கட்சியின் தலைமையோ இனவாத நோக்கில் செயற்படவில்லையானால், வருடத்தில் குறைந்தது 12 நாட்கள் வரும் போயா தினத்தில் ஒருநாளில் இத்தகையதொரு போராட்டத்தை நடத்த தீர்மானித்திருக்கலாம். அல்லவா அது மட்டுமல்ல, ஒரு வெசாக் தினத்திலோ, பொசன் தினத்திலோ இத்தகைய போராட்டம் ஒன்றை நடத்துவது பற்றிச் சிந்தித்திருக்கத்தான் முடியுமா?

ஆனால், தனியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்காரர்கள் மட்டும் தான் இத்தகைய இயல்பு கொண்டவர்கள் என்பதல்ல. ஐக்கிய தேசியக்கட்சியினரும் இத்தகைய இயல்பை கடந்த காலத்தில் வெளிப்படுத்தாமல் இல்லை. 1990 ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் சிறிலங்கா இராணுவம் வசாவிளான் பகுதி மீது பாரிய படை நடவடிக்கை ஒன்றை தீபாவளி தினத்தன்று மேற்கொண்டதை சுட்டிக்காட்ட முடியும். அப்பொழுது சிறிலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்ண "எமது பையன்கள் யாழ்ப்பாணத்தில் தீபாவளிக்குப் பட்டாசு கொழுத்திக் கொண்டாடுகின்றார்கள்'' எனக் குறிப்பிட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இவை ஒருபுறம் இருக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இப் போராட்டமானது அரசாங்கத்திற்கு எதிரான கண்டனப் பேரணி எனக்கூறிக் கொண்டாலும் சமாதான முயற்சிகளுக்கு–குறிப்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கு எதிரான நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது, தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறாகப் பேரினவாதத்தைக் கிளர்ந்தெழச்செய்வது சமாதான நடவடிக்கைகளை முறியடிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆனால், அரசாங்கத் தரப்பு விடுதலைப்புலிகள் இடைக்கால திட்டவரைவினைச் சமர்ப்பித்ததும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் எனக் கூறிக்கொள்வதில் காட்டும் அவசரம், அக்கறை உள்நாட்டில் சமாதான முயற்சிகள் மற்றும் இடைக்கால நிர்வாகம் என்பவற்றிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மாற்று நடவடிக்கைகள் எதையும் கொண்டிருப்பதாக இல்லை.

அதாவது, பேரினவாத சக்திகளைக் கிளர்ந்தெழவைக்கும் நடவடிக்கைக்கு எதிரான பதில் நடவடிக்கைகளை அது மேற்கொள்வதாக இல்லை. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடானது சமாதான முயற்சிகளில் அது குறியாக இருப்பதைவிட வேறு விடயங்களில் குறிப்பாக பொருளாதார உதவி, இராணுவ ஒத்துழைப்பு என்பனவற்றில் குறியாக இருப்பதையே வெளிக்காட்டுவதாக உள்ளது. அரசாங்கத்தின் போக்கு இவ்வாறானதாகவே தொடருமானால் பேரினவாதிகளால் சமாதான முயற்சிகள் தோற்கடிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகிவிடும்.

# தீபாவளியன்று எதிர்ப்புப் பேரணியா? சனாதிபதியுடன் ஆலோசிக்க முடிவு

(கொழும்பு)

தீபாவளி தினத்தன்று கொழும்பில் மாபெரும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தும் சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளின் திட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பாக சனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியிருக்கிறார். இந்துமாமன்றம் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இதனை அடுத்து இது குறித்துச் சனாதிபதியுடன் பேசவிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அத்துடன் பேரணியின் ஏற்பாட்டாளர்களுடனும் இது குறித்துப் பேசி இணக்கமான ஒரு முடிவை எடுக்க இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். இதே வேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை எடுக்கும் திட்டத்தை இந்து சமய விவகார அமைச்சர் மகேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஊடாக சனாதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கின்றார். இந்து சமய விவகாரங்கள் அமைச்சரால் இந்த முறை தலைநகர் கொழும்பில் ஏற்பாடு செய்துள்ள தீபாவளி விழாவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் கலந்து கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவின் உருவப்படத்தை தாங்கிச் செல்ல அறிவுறுத்து

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள "பொறுத்தது போதும்" என்ற தொனிப் பொருளில் "மக்கள் படை" என்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்வோர் சந்திரிகாவின் உருவப் படத்தைத் தவிர வேறொருவரின் உருவப்படத்தையும் ஏந்திவர சிறில.சு.க.தடை விதித்துள்ளது.

ஏனைய கட்சிகள் தனிநபர்கள் ஆகியோரின் உருவப்படத்தை இந்த அரச எதிர்ப்புப் போராட்டத்தின் போது ஏந்திச் செல்லக் கூடாது என கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேன, பேரணி ஏற்பாட்டுக்குழுச் செயலாளர் மங்கள சமரவீர ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிவித்தலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கட்சியினால் வழங்கப்பட்டுள்ள சுலோகங்களையும் பேரணிக்கு ஏற்ற விதத்தில் வாசகங்களை கூறுவதைத்தவிர வேறெந்த விதமானவற்றையும் அனுமதிக்க வேண்டாம் எனவும் கட்சி அமைப்பாளர்களிடம் கோரப்பட்டுள்ளது .

# தப்பியோடிய படையினரை சுயவிருப்பில் விலக்கும் முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பம்!

## -முதல் நாளில் இரண்டாயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

சிறிலங்காப் படைகளிலிருந்து தப்பி வந்தோர் தாமாகவே சேவையிலிருந்து விலகிக்கொள்ளும் வரையிலான முதற்கட்ட நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. கம்பஹா மாவட்டப் பிரதேச செயலகத்தில் இது ஆரம்பமானது.

கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 5000 பேர் இராணுவத்தில் இருந்து தப்பி வந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாத்திரம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் தம்மை இராணுவத்தில் இருந்து விலகிக்கொள்வதற்கான விருப்பத்தை உறுதிப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை படையிலிருந்து சுமார் 50 ஆயிரம் பேர் தப்பி வந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. (32)

# சமாதான முயற்சிகள் திருப்திகரமாக இருப்பின் இந்தியா கூடுதலான உதவிகளை வழங்கும்

## அத்வானி ரணிலிடம் உறுதியளிப்பு

நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுமானால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எந்தவொரு அரசியல் தீர்வை காண்பதற்கும் இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்குமென அறிவித்துள்ளது. சமாதான முயற்சியில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுமானால் இந்தியா கூடுதலான உதவியை வழங்குமென்று இந்தியாவின் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார். சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்தபோது இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டத்தில் இந்தியாவிற்குப் பாதகமான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று சிறிலங்காப் பிரதமர் உறுதியளித்திருக்கிறார். சகல நடவடிக்கைகளும் இந்தியாவின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். சிறிலங்காவின் விவசாயத்துறை, சுற்றுலாத்துறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு இந்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் கவனம் செலுத்தினார்கள்.

# வடக்கு-கிழக்கில் கட்டட புனரமைப்பிற்கு தொழிலாளர்களை பயிற்றுவிக்க ஏற்பாடு!

வடக்கு,கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் போர் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட கட்டடங்களை புனரமைப்பதற்கு தேவையான தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் விசேட திட்டமொன்று விரைவில் அமுல் படுத்தப்படவுள்ளது.

அதற்கான 40 கோடி ரூபா நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. உலகப் பல்கலைக் கழக சேவைகள் கனேடிய நிறுவனத்துடன் இது தொடர்பாக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக, வடக்கு, கிழக்கு சமூக மீளல் அமைப்பு அபிவிருத்தித்திட்டப் பணிப்பாளர் ரி.லங்கா நேசன் கூறியுள்ளார்.

வன்னி மாவட்டத்திலேயே இந்தப் பயிற்சித் திட்டம் முதன் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதற்கென 400 இளைஞர், யுவதிகள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அடுத்த கட்டமாக இப் பயிற்சித் திட்டம் கிழக்கு மாகாணத்திற்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தற்போது சர்வதேச நிதி நிறுவனங்களின் மூலமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற புனர் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பற்றாக்குறையை கருத்திற் கொண்டே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

# சிறிலங்கா — இங்கிலாந்து கிரிக்கெட் சுற்றுலா நவம்பரில்

சிறிலங்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான கிரிக்கெட் சுற்றுலா அடுத்த மாதம் 18ஆம் திகதி சிறிலங்காவில் நடைபெறவுள்ளது. இதற்காக இங்கிலாந்து அணி இலங்கை வருகிறது. இத்தொடரை ரி.என். என். ஒலிபரப்பவுள்ளது.

# முதல் டெஸ்ட்டில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுகளால் வெற்றி

லாகூரில் நடைபெறும் தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 08 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில்320 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்சில் 241 ஓட்டங்களையும் பெற்றுள்ளது. பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 401 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மழையால் இடைநிறுத்தம்

டாக்காவில் இங்கிலாந்து- பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழைகாரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி 04 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 01 ஓட்டத்தை பெற்ற நிலையில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# இராணுவ வாகன விபத்துத் தொடர்பில் தடயங்களை உடன் அகற்றக்கூடாது

## இளம்பரிதி வலியுறுத்து

இராணுவ வாகன விபத்துக்கள் நிகழும் இடத்தில் இருந்து விபத்துத் தொடர்பான தடயங்களை அகற்றுவதற்குரிய நடவடிக்கையில் படைத் தரப்பினர் ஈடுபடக்கூடாது என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் மதியம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி கரீனா தலைமையில் அரச அலுவலகத்தில் நடைபெற்ற படைத் தரப்பு மற்றும் புலிகளுக்கு இடையிலான சந்திப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதில் படைத் தரப்பு அதிகாரிகளாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் படையதிகாரிகளும், புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த இனியவன், செம்மணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மேற்படி விபத்து சம்பவங்களின் உண்மையான தவறிழைத்தவர்களை கண்டறிவதற்குரிய ஆதாரங்களை அகற்றும் முயற்சியில் படையினரும் அவர்களுக்குத் துணையாக பொலிசாரும் ஈடுபடுவது மக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கும் செயலாக அமைவதால்தான் இத்தகைய பொதுமக்கள் - படையினர் முரண்பாடுகள் உருவாவதாக அரசியல்துறையினரால் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து,

தடயங்கள் அகற்றுதல் என்ற விடயம் சட்டத்துடன் சம்பந்தப்பட்டதால் இது பொலிசார் மூலம் தீர்வு காணப்பட வேண்டிய விடயம் எனவும், இதற்குரிய பதிலைத தருவதற்கு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமுகமளிக்காததால் இது குறித்த பதிலை தன்னால் தர முடியவில்லை எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (33)

### பின்லாந்து...

சந்திப்பின் நோக்கமென பின்லாந்துத் தூதுவர் கூறியுள்ளார்.

இச்சந்திப்பினைத் தொடர்ந்து தூதுவர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது இது கிளிநொச்சிக்கான எனது மிகவும் குறுகிய கால விஜயம். இந்த விஜயத்தைத் தொடர்ந்து கொழும்பில் ஒருநாள் தங்கவுள்ளேன். அப்போது முக்கியமான விடயங்கள் குறித்து சிறிலங்கா அரசாங்க அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளேன். அத்துடன் கொழும்பில் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளேன் என்றார்.

# கண்டாவளை பிரதேச பிரிவில் உலருணவு முத்திரை விநியோகம்

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கீழ்வரும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கான 2003 ஜூலை- டிசெம்பர் உலருணவு நிவாரண முத்திரைகள் நாளை காலை 8.00 மணி முதல்பிற்பகல்வரை அந்தந்த கிராம சேவை அலுவலகங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது. எனவே, தகுதியானவர்கள் அனைவரையும் தவறாது கிராம சேவை அலுவலகங்களுக்கு சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரமந்தனாறு ,கல்மடுநகர், முரசுமோட்டை, தருமபுரம் மேற்கு, உமையாள்புரம், புளியம்பொக்கணை ஆகிய பிரிவினைச் சேர்ந்தோருக்கே முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், நாதன் குடியிருப்பினைச் சேர்ந்த மக்களும், ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் முதற்கட்ட விநியோகம் மேற்கொண்டபோது தவிர்க்க முடியாத காரணங்களால் முத்திரையைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களையும் நாளை கண்டாவளை பிரதேசசெயலர் பணிமனைக்கு சமுகமளித்து மேற்படி முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (14)

# படகு கவிழ்ந்ததில் இளைஞன் மரணம்



(அலுவலக செய்தியாளர்)

கடந்த 19ஆம் திகதியன்று வடமராட்சி தாளையடிக்கடலில் படகு கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

அன்றைய தினம் காலை 9.00மணியளவில் நான்கு இளைஞர்கள் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றபொழுது கடற்கொந்தளிப்பின் காரணமாக படகு கவிழ்ந்ததில் நால்வரும் கடலில் மூழ்கியுள்ளனரெனவும், படகு கவிந்தபோது படகில் அடியுண்டதன் விளைவாகவே மேற்படி இளைஞன் பரிதாபகரமாக மரணமாகியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் வீதியைச் சொந்த முகவரியாகவும், கல்லறை மடுமாதா மடுவினைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட சிவலிங்கம் முரளிதாஸ் (வயது 17) என்ற இளைஞரே மேற்படி சம்பவத்தில் மரணமானவராவார்.

கிளி.மாவட்டவைத்தியசாலையில் வைத்து கிளி. மாவட்ட மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி மரண விசாரணையினை மேற்கொண்டு விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். சடலம் தற்போது கிளி. மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உரித்துடையோர் மருதங்கேணி காவல்துறையினருடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். (சோ)

## மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த

# கராத்தே போட்டிகள் இரண்டாம் நாள் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையால் தமிழர் தாயகப் பகுதியின் எட்டு மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து நடத்தப்படும் கராத்தே சுற்றுப் போட்டியின் இரண்டாம் நாள் போட்டிகள் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இப்போட்டிகளின் இரண்டாம் நாள் போட்டிகள் கிளி/மத்திய விளையாட்டு மைதானத்தில நேற்றுக்காலை ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை வடகிழக்கு மாகாண கராத்தே சங்க சம்மேளனத் தலைவர் ரீ.கே. கேந்திரமூர்த்தி, போராளி கெங்கா ஆகியோர் ஏற்றி வைத்தனர். மேஜர் ஈழப்பிரியாவின் திருஉருவப்படத்திற்கான மலர்மாலையை தமிழீழ கராத்தே சங்கத்தலைவர் ரட்ணசோதி மாஸ்ரர் அணிவித்ததைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின.

நேற்றைய போட்டிகளில் 50,55,60,65 கிலோ நிறைக்குட்பட்டவர்களுக்கான தெரிவுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் சுமார் 200வரையான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான இறுதிப்போட்டிகள் இன்று பிற்பகல் 3மணிக்கு கிளிமத்திய மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

### நிமலராஜன்...

பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி, செயலாளர் க.சதீஸ், பொருளாளர் எஸ்.திருச்செல்வம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் சி.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் தலைமை இணைப்பாளர் கதீனா எரிக்ஷென் மற்றும் மரீலிஸ் யோர்க்சென் ஆகியோர் பங்கெடுத்தனர்.

அங்கு உரையாற்றிய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேலும் தெரிவிக்கையில் "நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பில் பாதுகாப்புப் படைத்தரப்பு எந்தவித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லையெனவும் அது ஒரு அரசியல் படுகொலையே எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண தமிழ் ஊடகவியலாளர்கள் தம்மை அடையாளம் காட்டிய பின்னும் படையினரால் தாக்கப்படுகின்றமை ஊடக சுதந்திரத்தை மீறும் செயற்பாடாக அமைவதுடன் இது அங்கு நடைபெறும் இராணுவ கெடுபிடிகளை வெளிக்கொண்டு வரக்கூடாது என்ற நோக்கிலேயே படைத்தரப்பு தொடர்ச்சியாக எம் பத்திரிகையாளர் மீது தாக்குதல்களை நடத்தி மிரட்டி வருவதாக நாமும எம் மக்களும் கருதுகின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டியபோது இது குறித்து கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு அவர்களது அடையாள அட்டைக்கு மதிப்பளிக்க வேண்டிய கடப்பாடு காணப்பட்டாலும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் இராணுவத்தினரால் தாக்கப்படும் சந்தர்ப்பங்கள் உருவாகுவதாகவும் இதைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் கூறினார். (33, 27)

### பாடசாலைகளின்...

மாணவர்களின் இயல்பான கல்விக்கு வழிசமைக்க வேண்டும் என யாழ்மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த கோரிக்கையையே யாழ் மாவட்ட இராணுவ தலைமையக அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இவ்வாறு படைநிலைகள் அகற்றப்படுவது தம்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு குந்தகமாக அமையும் என்பதை காரணம் காட்டி அதற்கு மறப்புத் தெரிவித்துள்ளனர். (33)

### லெப். கேணல்...

ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடற்படையுடனான மோதலில் கலாத்தனும் அவரது போராளிகளும் வீரச்சாவடைந்தனர். இந்தப் போராளியின் வீரச்சாவிற்கு பதிலடியாக ஒரு மாதகால இடைவெளிக்குள்ளாக பருத்தித்துறை கடலுக்கும் தொண்டமனாறு கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கலாத்தன் எந்தப் பணியில்ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதுவீரச்சாவடைந்தாரோ, அதே பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த டுல்விந்த என்ற எரிபொருள் கப்பல் மீது எமது போராளிகள் பதில் தாக்குதல் நடத்தி அந்தக் கப்பலை மூழ்கடித்தனர்.

நாம் இன்று இந்தத் திறமையான போராளியை இழந்துவிட்டோம். இன்று இந்த மாவீரனின் நினைவாக இவரது பெற்றோர்களால் அமைக்கப்பட்ட இந்த நூலகம் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற அனைவருக்கும் முன்னோடியாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்புலி மாவீரர் லெப்டினன்ட் கேணல் கலாத்தன் (செங்கண்ணன்) நினைவாக அவரது குடும்பத்தினரால் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட நூல் நிலையத்தை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நாடாவை வெட்டி திறந்து வைத்துள்ளார்.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு மேற்படி பாடசாலையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியினை பாடசாலையின் அதிபர் நவநீதமணி ஏற்றி வைத்தார். நூல் நிலையத்திற்கான பெயர்ப் பலகையை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திறந்து வைத்தார். மண்டப திறப்பு விழாவை முன்னிட்டு அமைக்கப்பட்ட கல்வெட்டை கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி திரைநீக்கம் செய்து வைத்தார். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நூலகத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து மண்டபத்தினுள் அலங்கரிக்கப்பட்டிருந்த மாவீரர் கலாத்தனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை மாவீரரின் தாயார் கஇராசலட்சுமி ஏற்றி வைத்து மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மாவீரரின் திருவுருவப்படத்திற்கான மலர் வணக்கம் நடைபெற்றது. மலர்வணக்கத்தை தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் செலுத்தினர்.

வடமராட்சிக் கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.தாயகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை பாடசாலை உப அதிபர் லோகநாதன் நிகழ்த்தினார். சிறப்புரைகளை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், அதிபர் நவநீதமணி ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் நன்றியுரையை பாடசாலை ஆசிரியர் க.பாஸ்கரன் நிகழ்த்தினார். (லோ)

### யாழ்...

காலை 10 மணிக்கு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் தாபன பகுதி நிர்வாக உத்தியோகத்தர் இபத்மநாதன் பொதுச் சுடரை ஏற்றி வைத்தார்.

உயிரிழந்த 21 பணியாளர்களினதும் உருவப்படங்களுக்கும் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சதுர்முகம் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதையடுத்து கொல்லப்பட்ட பணியாளர்களது உறவினர்கள் மலரஞ்சலி செலுத்தினர். குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் அங்கு பணியாற்றியதாதியானதிருமதி அருட்செல்வி கணபதி உள்ளிட்ட பணியாளர்கள் அஞ்சலி உரைகளை ஆற்றினர். (27, 33)

### இருதரப்பு...

இந்திய- சிறிலங்கா உடன்படிக்கையின் கீழ் இந்திய கம்பனி ஒன்றிற்கு திருகோணமலை எண்ணைக்குதங்கள் கையளிக்கப்பட்டதை சோனியாகாந்தி வரவேற்றுள்ளார். (32)

### பாதுகாப்பு...

படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் இறையாண்மை பூகோள ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு ஆகிய விவகாரங்களை இந்தியா தொடர்ந்தும் கூர்மையாகக் கவனிக்கும். அத்தோடு இலங்கையில் தற்போது தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகள் விரைவில் மீண்டும் தொடங்கும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் இடைக்கால நிர்வாகம் குறித்து, விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்க இருக்கும் மாற்றுவரைவுத் திட்டம் நியாயமானதாகவும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது. இலங்கையில் ஏற்படும் இடைக்கால ஒப்பந்தம் எதுவானாலும் இறுதி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகவே அது அமைய வேண்டும். மேலும் இந்த கூட்டறிக்கையில் பயங்கரவாதம் அதை எதிர்கொள்வதற்கு இந்தியாவும் சிறிலங்காவும் சேர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கும் வகையிலான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி ஆராயவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய-சிறிலங்கா இராணுவங்களுக்கிடையில் எந்தவிதமான கூட்டுறவு ஒப்பந்தம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்று இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சகத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரியான நவ்தேவ் சர்மாவிடம் ஊடகவியலாளர் கேட்டபோது, சிறிலங்காப் படையினருக்கு இந்தியா தற்பொது அளித்துவரும் பயிற்சிகள் மற்றும் வழங்கிவரும் ஆயுதங்கள் பற்றி இரு நாட்டுப் பிரதமர்களும் விவாதித்தனர். மேலும் இரு நாடுகளுக்கிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்புஒப்பந்தத்தைஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை மிக விரைவில் தொடங்குவதற்கு இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த இராணுவஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றி மேலதிக விபரங்களை, தற்போதைக்கு என்னால் விபரிக்க இயலாது என்று சர்மா கூறியுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.